கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகள்,சென்னை–6.
பிறப்பிப்பவர்: முனைவர்.(திரு).சி.பூரணசந்திரன் எம்.சி.ஏ., எம்ஃபில்., பிஎச்.டி.,

ந.க. எண்.018841/அ4/2020 நாள். 14.09.2021

பொருள்: தமிழ்நாடு அமைச்சுப் பணி – கல்லூரிக் கல்வி இயக்ககம்– நேரடி நியமனம் – தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் தொகுதி–IV – 2018–2019 மற்றும் 2019–2020 ஆண்டுகளுக்கு இளநிலை உதவியாளர்கள் தெரிவு செய்யப்பட்டு பணியமர்த்தப்பட்டமை – பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் – தொடர்பாக

பார்வை:
1. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலர் கடித எண்.2361/PSD–1/2020, நாள்.29.05.2020
2. கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் செ.மு.ந.க.எண்.16252/பி1/2020, நாள்.27.08.2020
3. கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் செ.மு.ந.க.எண்.018441/அ4/2020, நாள்.01.09.2020
4. கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.16252/பி1/2020 நாள். 07.09.2021.

<><><><>

பார்வை (1)–ல் காணும் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய கடிதத்தில் 2018–2019 மற்றும் 2019–2020 ஆம் ஆண்டுகளுக்கான தொகுதி–IV–இல் தெரிவு செய்யப்பட்டு, இளநிலை உதவியாளர்களாக பணிபுரிய இத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதனைத்தொடர்ந்து, பார்வை (3)–இல் காணும் கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகளில் கீழ்காணும் பணியாளர்களுக்கு பணி நியமன ஆணை வழங்கப்பட்டு இவ்வலுவலகத்தில் பணியில் சேர்ந்தனர்.

| வ.எண். | பெயர்<br>திரு/திருமதி/செல்வி. | இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்த நாள் |
|---|---|---|
| 1 | திருமதி. கோ.மாலதி | 08.09.2020 முற்பகல் |
| 2 | திரு. மா.சதீஷ்குமார் | 09.09.2020 முற்பகல் |
| 3 | திரு. வெ.அருண்குமார் | 04.09.2020 முற்பகல் |
| 4 | திரு. ஏ.ரகுலதச்செல்வன் | 02.09.2020 முற்பகல் |
| 5 | செல்வி. க.காயத்ரி | 08.09.2020 முற்பகல் |
| 6 | திரு. ச.ராமச்சந்திரன் | 07.09.2020 முற்பகல் |
| 7 | திரு. த.சந்திரசேகர் | 04.09.2020 முற்பகல் |

பார்வை 4–ல் காணும் கடிதத்தின்படி, அவர்கள் பணியில் சேர்ந்த நாள் முதல் கீழ்க்கண்ட நிபந்தனைக்கு உட்பட்டு இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

"இப்பணிவரன்முறை தொகுதி–IV 2018–2019 மற்றும் 2019–2020 பணிநியமனம் தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் நிலுவையில் உள்ள வழக்குகளில் வழங்கப்பட உள்ள இறுதி தீர்ப்பாணைக்குட்பட்டது."

மேற்காணும் பணியாளர்களுக்கு பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து மூன்றாண்டுகள் தொடர்ச்சியான பணிக்காலத்தில் இரண்டாண்டுகள் தகுதிகாண் பருவக் காலத்தில் வைக்கப்படுவர் என்றும், இக்காலக்கட்டத்திற்குள் மாவட்ட அலுவலக நடைமுறை நூல் தேர்வு மற்றும் அரசு பணியாளர்களுக்கான பவானிசாகர் அடிப்படைப் பயிற்சி தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும் எனவும் அறிவிக்கப்படுகிறது.

ஒம்./–சி.பூரணசந்திரன்
கல்லூரிக் கல்வி இயக்குநர்

பெறுநர்:
சார்ந்த பணியாளர்கள்
நகல் :
"பி" பிரிவு
"அ2" இருக்கை

உண்மை நகல் /உத்தரவுப்படி/ வழங்கலாகிறது.

15/9/2021
கல்லூரிக் கல்வி இயக்குநருக்காக

15/9/2021